# 11 திலகவதியார்

பெரிய புராணம் குறிப்பிடும் முதன்மை நாயன்மார்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசருடைய வாழ்க்கை வரலாற்றினூடாக திலகவதியாரது சிவபக்தியின் உயர் நிலையை அறிய முடிகின்றது.

## 1.திரு அவதாரம்

பாரதத்தின் தமிழகத்திலே கி.பி ஏழாம் நூற்றாண்டில் சமண சமயமானது அரசர்களது ஆதரவோடு மேன்நிலையை அடைய, சைவ சமயமானது நலிவுற்றுக் காணப்பட்டது.



இத்தகைய சூழ்நிலையில் சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடையில் உள்ள திருமுனைப்பாடி நாட்டிலே திருவாரூரில் தன்னை நாடி வருபவர்களுக்கு விருந்தோம்பி மகிழ்பவராக புகழனாரும் மாதினியாரும் விளங்கினர்.

இவர்கள் செய்த முன்வினைப் பயனாக திருமகளை ஒத்த பெண்குழந்தை ஒன்று அவதரித்தது. அதற்கு திலகவதி என நாமம் சூட்டி மகிழ்ந்தனர்.

**புகழனார் தமக்குறியமைப் பொருவில்குலக் குடியின்கண்**
**மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்**
**திகழுமலர்ச் செங்கமல நிரையிதழி னகவயினிற்**
**றிகழவருந் திருவனைய திலகவதியார் பிறந்தார்.**

என்றவாறு சேக்கிழார் பெரிய புராணத்தில் திலகவதியாரது திருவவதாரம் பற்றி குறிப்பிடுகின்றார். திலகவதியார் பிறந்து சில ஆண்டுகளின் பின் மருணீக்கியார் எனும் தம்பியார் அவதரித்தார்.

## 2.முடிவாகி நிறைவேறாத திருமணம்

திருமணம் பேசி மணவுறுதி நிகழ்விற்கு பின் மண நாளுக்குரிய நாளையும் குறித்தனர்.

திருமணமாவதற்கு முன் கலிப்பகையார் அரசனின் ஆணைப்படி உள்ள யுத்த களத்திற்கும் சென்றார். அவ்வேளையில் திலகவதியாரது தந்தையாராகிய புகழனார் இறையடி சேர்ந்தார். கணவனை இழந்த கடும் துயரத்தால் மாதினியாரும் உடனுயிர் நீத்தார். கூடவே போர்க்களத்தில் கலிபகையார் இறந்த செய்தியும் வந்தது.

## 3.தம்பிக்காக வாழத்துணிதல்

திருமணமாகவில்லையாயினும் தனக்காக நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் விண்ணை அடைந்தார் என்ற செய்தியைக் கேட்ட திலகவதியார் தனது உடலை

துறக்கத் துணிந்தார். உடன்கட்டை ஏறுவதற்காக ஆயத்தமானார்.

அத்தருணத்தில் பன்னிரண்டு வயது நிரம்பிய தம்பியராகிய மருணீக்கியார் தாய் தந்தையரை இழந்த பிறகு தமக்கையே முழு ஆதரவு என்ற கருத்தில் தமக்கையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ''நீங்களும் இறக்கத் துணிந்தால் என் கதி என்ன ஆகும்? என்று அழுதமையால் மனம் இளகிய திலகவதியார் தம்பிக்காக வாழத் தலைப்பட்டார்.

## 4.தம்பியார் மதம் மாறியும் தான் நிலை மாறாமை

தொடர்ந்து வந்த துன்பங்களால் துவண்டு போன மருணீக்கியார் சமணசமயக் கொள்கைகளால் கவரப்பட்டு ஈற்றில் சமணசமயத்தைத் தழுவினார். சமண சமய நூல்களை கற்றும் சார்பான நூல்களை வெளியிட்டார். தருமசேனர் எனப் பெயருடன் திருப்பாதினிரிப் புலியூரில் உள்ள சமண மடத்தின் தலைமைக் குருவாக விளங்கினார்.

இத்தகைய நிலையைக் கண்ட திலகவதியார் எந்தத் தம்பிக்காக இவ்வுலக வாழ்வை விரும்பினாரோ;அத்தகைய தம்பி தம்மை விட்டு அகன்றதும் சைவ நெறியை விட்டு அகன்று சமணநெறியின் பால் தளுவியதும் இவர் அளவற்ற துன்பத்தை அடைந்தார்.

சித்தத்தை சிவன்பால் கொண்ட திலகவதியார் சிவ வழிப்பாட்டில் நின்று சிறிதளவேனும் வழுவாது சிவ சிந்தனையுடன் வாழத் தலைப்பட்டார். தான் வசித்த வீட்டை விடுத்து கெடில நதிக்கையில் விளங்கும் அதிகை வீரட்டானேஸ்வரர் ஆலயத்து மடத்திற்கு சென்று சிவப்பணிகள் பல செய்து வாழத்தலைப்பட்டார்.

## 5. கோயில் திருப்பணி

திருவீரட்டானேஸ்வரர் ஆலயத்தில் திலகவதியார் அதிகாலை எழுந்து திருப்பள்ளியெழுச்சிக்கு முன்னராக ஆலயத்தைக் கூட்டித்துப்புரவு செய்தலும் பின் சாணத்தால் மெழுகியும், பூசைக்கு வேண்டிய பூக்களையும் மாலைகளையும் வழங்கியும், தூப தீபங்களை ஏற்றியும் வழிபாடு செய்தார்.

பிற்காலத்தில் அப்பர் சுவாமிகள் சரியை நெறியின்பால் செல்லத் தலைப்படுவதற்கு திலகவதியாரது இத்தகைய ஆலய சரியைப் பணிகள் அவருக்கு முன்னோடியாக அமைந்தன.

## 6.திலகவதியாரது விண்ணப்பம்

சிவனது எட்டு வகையான வீரச்செயல்கள் இடம்பெற்ற தலமான திருவீரட்டானேஸ்வரத்தில் உறையும் திருவீராட்டானேஸ்வரருக்கு அனுதினமும் சிவப்பணிகள் செய்து வந்த திலகவதியார் இறைவன்பால் ஒரு விண்ணப்பம் செய்து வந்தார்.

திலகவதியாரது கோரிக்கைக்கு இணங்கிய சிவபெருமான் ஒரு நாள் அவரது கனவில் தோன்றி ''நீ உனது மனக்கவலையினை ஒழிவாயாக'' உன் உடன் பிறந்தான் முன் பிறப்பில் முனியாகி இருந்து எம்மையடைய தவம் செய்தான் அதில் சிறிது வலுவினானாதலில் இப்பிறவியைப் பெற்றான். அவனை இனி சூலை நோய் கொடுத்து ஆட்கொள்வோம் என்றருளினார்.

## 7.சூல நோய்


திலகவதியாரது நீண்ட கால வேண்டுதலினால் அவரது தம்பியாராகிய தருமசேனரை ஆட்கொள்ள சிவபெருமான் சித்தமானார். கொடிய சூல நோயை தருமசேனரிடத்தே ஏற்படுத்தினார்.

சமணர்கள் தமது குருவுக்கு ஏற்பட்ட நோயைக் குணப்படுத்த பலவாறு முயன்று தோற்றனர். துணை செய்வார் எவருமின்றி கிடந்த தருமசேனருக்கு தம்மை மறவாத தமக்கையரின் நினைவு வந்தது.

## 8. திருவதிகை சார்தல்

தமது தமக்கையாரிடம் தாம் செல்வதே உசிதம் என்றெண்ணி சமணர்கள் யாரும் அறியா வண்ணம் நள்ளிரவுப் பொழுதில் திருவதிகை சென்றார். அதிகாலைப் பொழுதில் திருவதிகைத் திருமடத்தில் தங்கியிருந்த திலகவதியாரினது காலில் விழுந்து ''ஐயோ என்னால் இந்த சூலை நோயை பொறுக்க முடியவில்லையே! நான் கரையேறும் நெறியைக் காட்ட வேண்டும்'' என்று சொல்லி அழுதார். திலகவதியார் அவரை எழுப்பி''இறைவன் திருவருளால்தான் இது நீங்க வேண்டும் அவனுக்கு தொண்டு செய்வாயாக'' என்றுகூறி திருவதிகை வீரட்டானப் பெருமானது சந்நிதிக்கு அழைத்துச் சென்றார்.

## 9.அம்மையார் குரு தீட்சை அளித்தல்



திலகவதியார் தமது தம்பியராகிய மருணீக்கியாரை மீண்டும் சைவநெறியைப் பின்பற்றும் முகமாக குரு தீட்சை அழித்து அவரைப் பக்குவப்படுத்தப்பட்ட ஆன்மாவாக மாற்றினார். திருவைந்தெழுத்தை ஓதித் திருநீற்றினை வழங்கினார். மருணீக்கியார் திலகவதியார் வழங்கிய திருநீற்றினை அணிந்ததும் புதுப் பொலிவு பெற்றார்.

## 10.சிவன் ஆட்கொள்ளல்

திருவதிகை வீரட்டானேஸ்வரப் பெருமானுக்கு திருப்பள்ளி எழுச்சிக்குரிய பூசைகள் நடந்து கொண்டு இருந்தன. திலகவதியாரை தொடர்ந்து சென்ற மருணீக்கியார் ஆலயத்தை வலம் வந்தார். உள்ளத்தில் அவரது பழைய நினைவுகள் கொந்தளித்தன.

**''கூற்றாயின வாறு விலக்ககலீர்!**
**கொடுமை பல செய்தன நான் அறியேன்....''**

என்ற பதிகத்தை பாடினார். சிவனது திருவருளால் சூலை நோய்நீங்கப் பெற்றதோடு மருணீக்கியாரது செந்தமிழ் திறனைக் கண்ட சிவபெருமான் ''திருநாவுக்கரசு'' என்னும் நாமத்தினை அசரீரி வாயிலாக வெளியிட்டார்.

## 11.திலகவதியார் சிவபதம் அடைதல்

திலகவதியார் தான் யாருக்காக இவ்வளவு காலமும் வாழத் தலைப்பட்டாரோ அது சிவனது திருவருளால் கைகூடி விட்டது. திருவதிகை வீரட்டானேஸ்வரப் பெருமானுக்கு மேலும் சில காலம் வாழ்ந்து திருப்பணிகள் செய்து ஈற்றில் சிவபதம் அடைந்தார்.

**பயிற்சிகள்**

1. திலகவதியாரை விட்டு மருணீக்கியார் சமண சமயம் தழுவியமைக்கானகாரணம் யாது?
2. திலகவதியார் திருவீரட்டானேஸ்வரர் ஆலயத்தில் செய்த தொண்டுகள் யாவை?
3. திலகவதியார் சிவபெருமானிடத்தில் செய்த வேண்டுதலுக்கு சிவபெருமான் எவ்வாறு வாக்கு கொடுத்து அருளினார்?

**செயற்பாடு**

★ சைவ சமய வளர்ச்சியில் திலவதியாரது பங்களிப்பு என்னும் தலைப்பில் பேசுவதற்கு ஏற்றவாறு 200 சொற்களில் கட்டுரை எழுதுக.

**பாடச்சுருக்கம்**

★ திலகவதியார் இளமைக் காலத்திலே தொடர்ந்து வந்த துன்பங்களுக்குள் துவழாமல் தன் தம்பிக்காக வாழ்ந்தவர்.

★ தனது தம்பி சமண சமயம் தழுவிய போது வீட்டைவிட்டு வெளியேறி திருவீரட்டாணேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று அங்கு இறைவனுக்குத் தொண்டுகள் செய்தார்.

★ திலகவதியாரது வேண்டுகோளை நிறைவேற்ற சிவபெருமான் சூல நோயை மருநீக்கியாருக்கு ஏற்படுத்தினார்.

★ திலகவதியாரது வழிகாட்டுதலால் தம்பியார் சிவனால் ஆட்கொள்ளப்பட்டு திருநாவுக்கரசர் என்னும் நாமம் கொண்டார்.

★ திலகவதியார் நாவுக்கரசரது சரியைத் தொண்டுகளுக்கு மூலகாரணமாக அமைந்தார்.